

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2025) சென்னையில் நடைபெற்ற ஈகிள் பிரஸ் குழுமத்தின் இணை தலைவர் பி.சாம் பிரசாத் அவர்களின் மகன் ஜோசப் அபிஷேக் ராஜேந்தர் சிங் – அனிஸ் ரெபேகா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் மனோஜ் பாண்டியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### ‘ஷ்னைடர்’ எலெக்ட்ரிக் குழுமம் சார்பில் – சென்னை – கோவை ஆலைகளின் விரிவாக்கம்; – ஓசூரில் புதிய ஆலை!

# ரூ.718 கோடி முதலீட்டில் - 663 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது!

**சென்னை, டிச.19-**

**ரூ.718 கோடி முதலீட்டில், 663 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம் அதன் சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆலைகளின் விரிவாக்கம் மற்றும் ஓசூரில் புதிய ஆலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (18.12.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம் 718 கோடி ரூபாய் முதலீட்டில் 663 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள Schneider Electric India Private Limited (SEIPL) நிறுவனத்தின் ஆலைகளின் விரிவாக்கம் மற்றும் ஓசூரில் Schneider Electric IT Business India Private Limited (SEITB) நிறுவனத்தின் மின்கலன்கள் (Batteries) மற்றும் குளிர்விப்பு தீர்வுகளுக்கான (Cooling solutions) புதிய ஆலை அமைக்கும் திட்டங்களுக்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்பு களை உருவாக்கவும், 2030-க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம்

ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம், மின்சாரம் மற்றும் மின்னணு சாதனங்கள் உற்பத்தி மற்றும் மின் மேலாண்மை தீர்வுகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகிறது. சுமார் 30 வருடங்களாக, தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் இக்குழுமம், தனது நிலையை மேலும் வலுப்படுத்தும் வகையில், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள ஸ்மார்ட் உற்பத்தி ஆலைகளை விரிவுபடுத்தவும், ஓசூரில் ஒரு புதிய அதிநவீன உற்பத்தி ஆலை நிறுவவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த முதலீடுகள் மூலம், ஏற்றுமதியை ஊக்குவித்து, உள்ளூர் உற்பத்தி மற்றும் வணிக வளர்ச்சியை வலுப்படுத்த ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம் திட்ட மிட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமத்தின் துணைத் தலைவர் அன்ஷும் ஜெயின், நிதி இயக்குநர் சுனில் சத்யப்ரகாஷ், சென்னை வளாகத்தின் தலைவர் விஸ்வநாதன் பொன்னுசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2025) சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட மதி கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை திறந்து வைத்து, விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த தயாரிப்பு பொருட்களைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, வாழ்ந்து காட்டுவோம் திட்ட முதன்மை இயக்க அலுவலர் திருமதி ஆஷா அஜித், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் உடனிருந்தனர்.

### பள்ளிக்கரணை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில்

# “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாம்!

*சென்னை,டிச.19-*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைக்கும் விதமாக, 02.08.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் முதல் மருத்துவ முகாமினை தேனாம்பேட்டை மண்டலம், சாந்தோம் செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மண்டலத்திற்கு ஒரு மருத்துவ முகாம் வீதம் மொத்தம் 15 “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, இதுவரை பத்து கட்டங்களாக நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம்களில் இதுவரை 24,587 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, பெருங்குடி மண்டலம், பள்ளிக்கரணையில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று (19.12.2025 வெள்ளிக்கிழமை) “நலம் காக்கும் ஸ்டாலின்“ திட்ட முகாம் 11ஆவது கட்டமாக நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ முகாம் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்தியமுறை மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம் மற்றும் ஸ்கேன் பரிசோதனை ஆகிய 17 துறைசார் நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகள், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனை, முழுமையான உடல் ஆரோக்கிய பரிசோதனை, காசநோய், தொழுநோய் பரிசோதனை, ஆரம்ப புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது.

மேலும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற இணைச் சேவைகளும் வழங்கப்படுகிறது.

பெருங்குடி மண்டலம், பள்ளிக்கரணையில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று (19.12.2025) நடைபெறவுள்ள “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாமில் பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*காஞ்சிபுரம். டிச.19,*

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை நடைபெறு வதையொட்டி மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (20.12.2025 சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில், மதுராந்தகம். ஹோட்டல் ஹைவே கூட்ட அரங்கில், மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ.எஸ். தினகரன், க.செல்வம் எம்.பி., கு. மலர்விழி குமார், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சட்டமன்ற உறப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளார்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோது வரைவு வாக்காளர் பட்டியல் கழக நிர்வாகிகளிடம் வழங்குவது சம்பந்தமாகவும் கழக அக்கப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில அளவிலான, பெண்கள், ஆண்களுக்கான கைப்பந்து போட்டி மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டன் தலைமையில் நடைபெற்றது. வர்த்தக அணி தலைவர் சிப்ஸ் மணி முன்னிலையில் மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தொடங்கி வைத்தார். இதில் 12வது மண்டலக் குழு தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் பி குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி பிரகாஷ் வட்டக் கழக செயலாளர் ஜெ. நடராஜன், இ.உலகநாதன், மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன், ப.ராஜா, எஸ்.ஆர்.ரவி, வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

